# தொல்காப்பியம் காட்டும் இறை

**முனைவர் பொ.ராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்
மகளிர் உயர்கல்வி நிறுவனம்
கோயமுத்தூர்

**மலர்:** 3

**இதழ்:** 2

**தொகுதி:** 1

**மாதம்:** அக்டோபர்

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

தமிழ் இலக்கணங்களுக்கு மூலநூலாகத் திகழ்வது தொல்காப்பியமாகும். தமிழ் மொழி ஐந்திலக்கண மரபைக் கொண்டது. எழுத்திலும் சொல்லிலும் மொழியின் இலக்கணத்தைக் கூறியும் பழங்காலத்தில் நிலவிய காதல் வாழ்வும் வீர உணர்வும் சிறப்புடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழரின் வாழ்வியல், மெய்யியல் குறித்த சிந்தனைகள் தொல்காப்பியத்தில் பதிவாகியுள்ளன.

தொல்காப்பியம் மொழியின் இயல்பினைக் கூறும் நூலாகவும் பழந்தமிழின் பண்பாட்டுக் கருவூலமாகவும் திகழ்கிறது. இலக்கண நுட்பங்களை எளிமைப்படுத்திக் கூறியதோடு மட்டுமல்லாமல், தொல்காப்பியர் பல இடங்களில் தமிழரின் இறைநிலையை விளக்கும்வகையில் நூற்பாக்களை அமைந்துள்ளார். தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் இடம் பெறுகின்ற இறை உணர்வு தொடர்பான செய்திகளை மையப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பழங்கால மக்களிடத்தில் இருந்த சமய உணர்வினைத் தொல்காப்பிய வழியில் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை:

1. பஞ்சபூத வழிபாடு
2. நானில வழிபாடு
3. பெண் தெய்வ வழிபாடு
4. நடுகல் வழிபாடு
5. வெறியாட்டு

## பஞ்சபூத வழிபாடு

இவ்வுலகமானது நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களின் கலப்பால் ஆகியது என்ற கருத்தினைத் தொல்காப்பியர் மரபியலில் கூறியுள்ளார்.

**“நிலம் தீநீர் வளிவிசும்பொடுஐந்தும்**
**கலந்தமயக்கம் உலகம் ஆதலின் (தொல். பொருள் 1589)**

உலகில் உள்ள ஒவ்வொரு பருப்பொருளுள்ளும் இப்பஞ்சபூதங்கள் கலந்துள்ளன. இப்பஞ்சபூதங்களின் இயக்கமின்றி உலகமும் இல்லை; உலக உயிரினங்களும்

இல்லை. மனிதன் அவற்றின் இன்றியமையாமையைக் கருதி அவற்றினை முழுமுதற் கடவுளாக வழிபடத் தொடங்கினான். அவைகளின் முறையே இயற்கை வழிபாடானது. தற்காலத்தில் வழிபாட்டு முறைகளுள் ஒன்றான பஞ்சபூதங்கள் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியர் தனது நூலில் நயம்பட முறைப்படுத்தியுள்ளார்.

## நானில வழிபாடு

தொல்காப்பியர் கருப்பொருட்களின் வரிசையில் நானிலத்திற்குரிய தெய்வத்தை முன்னதாக வைத்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வாரு நிலத்திற்கும் தனித்தனியாகத் தெய்வத்தை இயல்பாக அமைத்துள்ளார்.

**“மாயோன் மேயகாடுறைஉலகமும்**
**சேயோன் மேயமைவரைஉலகமும்**
**வேந்தன் மேயதீம்புனல் உலகமும்**
**வருணன் மேயபெருமணல் உலகமும்**
**முல்லைகுறிஞ்சிமருதம் நெய்தல் எனச்**
**சொல்லியமுறையான் சொல்லவும் படுமே”, (தொல்.பொருள்.951)**

நிலத்தையும் கடவுளையும் நிலம்வாரியாக பிரிக்கப்பட்டிருந்ததைத் தொல்காப்பியப் பாடல் வழி அறியமுடிகிறது. ஐவ்வகை நிலத்துமக்களும் இயற்கையோடு ஒன்றிணைந்து கடவுள், தலைவன் ஆகியயோரை உருவகித்துக்கொண்டு அந்நிலத்திற்கேற்ப ஒழுக்கம், உணவுவகை, தொழில், இசைக்கருவி போன்றவற்றை பிரித்துக்கொண்டு வாழ்ந்து வந்ததாகத் தொல்காப்பியம் அகத்திணை இயல் காட்டுகிறது முல்லைக்குத் திருமாலும், குறிஞ்சிக்கு முருகனும், மருதத்திற்கு வேந்தனும், (இந்திரன்) நெய்தலுக்கு வருணனும் என முன்னோர்கள் பெயரிட்ட முறைப்படி நிலத்திற்குரிய தெய்வத்தை இந்நூற்பாவின் வழி விளக்கியுள்ளார்.

## பெண் தெய்வ வழிபாடு

போரில் வெற்றிபெற்ற வீரர்கள் தங்களது வெற்றியைக் கொண்டாடும்வகையில் வெற்றிக்குரிய தெய்வமாகத் திகழும் ‘கொற்றவையை’ துடிகொட்டி ஆடி தங்களது மனத்தில் எழும் மறவுணர்வை வெளிப்படுத்தும்வகையில் பெண் தெய்வத்தை வழிபடுவர்.

**“மறங்கடைக் கூட்டியதுடிநிலை சிறந்த**
**கொற்றவைநிலையும்அகத்திணைப் புறனே (தொல்.பொருள்.1005)**

கொற்றவையாகிய வெற்றித் தெய்வத்தினை வழிபடும் வழக்கம் அக்கால மக்களிடையே நிலவிவந்ததைத் தொல்காப்பியம் வழி அறியமுடிகின்றது.

## நடுகல் வழிபாடு

போரில் இறந்துபட்டவீரனின் நினைவாக நடுகல் வழிபாடு அமைகிறது. நடுகல் வழிபாட்டினைத் தொல்காப்பியர் ஆறு படிநிலைகள் கொண்டு தெளிவுபடக் கூறியுள்ளார்.

**“காட்சிகால்கோள் நீர்ப்படைநடுகல்**
**சீர்த்தகுசிறப்பின் பெரும்படைவாழ்த்தல் என்று**
**இருமூன்றுவகையில் கல்லொடுபுணரச்**
**சொல்லப்பட்டஎழு மூன்றுதுறைத்தே” (தொல்.பொருள்.1006)**

தெய்வத்திற்கு கல்லெடுத்துக் கோயில் கட்டுவதுபோல், பழந்தமிழகப் போர்க்களத்தில் மாண்ட பெருவீரனையும் தெய்வமாகப் பாவித்து, தெய்வத்திற்குச் செய்வதுபோல ஆறு வகைப்பட்ட வழிபாட்டுச் செயல்களையும் செய்தனர்.

1) **காட்சி** - போர் களத்தில் இறந்த வீரனைக் கல்லில் நிறுத்துதல்பொருட்டு, அதற்குத் தகுந்த கல்லைத் தேடிக் காண்பதுக்காட்சி எனப்படும்.

2) **கால்கோள்** - தேடிக் கண்டெடுத்த கல்லைக் கைக்கொண்டு தம்மிடத்திற்கு எடுத்துவருவதாகும்.
3) **நீர்படை** - கொணர்ந்த கல்லை நீராட்டித் தூய்மைபடுத்தி வழிபாட்டிற்கு உரியதாக்குவதாகும்.
4) **நடுகல்** - நீராட்டித் தூய்மைப்படுத்திய கல்லைக் கோவிலில் காணும் இடத்தில் நடுவதாகும்.
5) **பெரும்படை** - நாட்டிய கல்லுக்குப் படையல் இடுவதும், கோயில்கட்டுவதும் பெரும்படை எனப்படும்.
6) **வாழ்த்து** - பெரும்படைகண்ட கல்லைப் பூசை முதலியன செய்து வழிபடுவது வாழ்த்து எனப்படும்.

என்று ஆறு பெரும் துறைகளாகப் பிரித்து நடுகல் வழிபாட்டு முறையினைப் பகுத்துள்ளார்.

### வெறியாட்டு

போர் நடைபெறும் சூழலில் மறவர்கள் ஒன்றுகூடி வெறியாட்டு நிகழ்த்தி போர்க்குரிய குறியைக் கேட்டு அறிவார்கள்.

**“வெறியறிசிறப்பின் வெவ்வொய் வேலன்**
**வெறியாட்டுஅயர்ந்தகாந்தளு”** **(தொல்.பொரு.1006)**

வெறியாடலின் சிறப்பினை அறிந்த முருகனைப் போல் கையில் வேல் பிடித்தபடி காந்தள் மலரணிந்து குறி கூறும் வழக்கம் பழங்கால மக்களிடத்தில் காணப்பட்டதைத் தொல்காப்பியம் வழி அறியமுடிகிறது.

**கட்டினும் கழங்கினும் வெறி என இருவரும்** **(தொல்.பொருள்.1061)**

களவுகாலத்தில் தலைவியின் வேறுபாட்டினை அறிந்த செவிலி கட்டுவிச்சி மூலமாகவும் கோடங்கி மூலமாகவும் வெறியாட்டினை நிகழ்த்தி செய்தியை அறிவதாகத் தொல்காப்பியர் விளக்கியுள்ளார்.

**“வழிபடுதெய்வம் நிற்புறம் காப்பப்**
**பழிதீர் செல்வமொடுவழிவழிசிறந்து**
**பொலிமின் என்றும் புறநிலைவாழ்த்தே** **(தொல்.செய்.1367)**

வழிபடும் தெய்வத்தின் திருவருளால் எடுத்துக்கொண்டசெயல் இனிது நிறைவேற்றப்பட்டு, துன்பம் தொடராதவாறு புறங்காக்கப்பெற்று பழிதீர்த்த பெருஞ்செல்வத்துடன் வாழையடி வாழையென இவ்வுலகில் நெடுங்காலம் நிலைபெற்று இனிது வாழலாம் என்பதைப் புறநிலைவாழ்த்துத் துறையில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். திருமணம் நிறைவேறியநிலையில், தனது வேண்டுகோளினை ஏற்று அருள்புரிந்த தெய்வத்திற்குத் தான் வேண்டிய பரவுக்கடன் கொடுத்திடல் வேண்டும் என்பதை

**கிழவோட் சுட்டியதெய்வக் கடத்தினும்** **(தொல்.கற்.1096)**

தெய்வக்கடன் என்பது நேர்த்திக்கடன் எனப்படுகிறது. களவு வாழ்க்கையானது கற்புவாழ்க்கையாகத் தொடரும்போது நேர்த்திக்கடனைச் செலுத்தியுள்ளனர்.

### தொகுப்புரை

தொல்காப்பியம் என்னும் பழந்தமிழ் இலக்கண நூலில் மதம்,சமயம் என இரு சொற்களும் இடம் பெறவில்லை. தொல்காப்பியர் காலத்தில் ஐந்து வகையாக நிலம், பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நிலத்திற்கும் ஒருகடவுள் குறிக்கப்பட்டு, மக்கள் அக்கடவுளை வழிபாடுசெய்து வாழ்ந்துவந்தனர் என்பதும், சங்ககாலத்திற்கு முன்பு காணப்பெற்ற தமிழர்களின் தத்துவச் சிந்தனைகளை உணர்ந்து கொள்வதற்கு அடிப்படை சாசன நூலாகத் தொல்காப்பியம் விளங்குகிறது.